# இயல் : ஐந்து

## இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்கள்

### 5.1. கருணைக் கோட்பாடு

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவைப் பொறுத்த வரை உயிர் கொலை, புலால் உண்பது கூடாது என்கின்றனர். இதுவே கருணை நெறி என்கின்றனர்.

இராமலிங்க அடிகளார் திருவருட்பா பாடல்கள்,

"உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர் அவர் புறஇனத்தார் அவர்க்குப்
பயிர்ப்புறும் ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக
பரிந்து மற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே
நயப்புறுசன் மார்க்கம் அவர் அடையளவும் இதுதான்
நம் ஆணை என்றெனக்கு நவின்ற அருள் இறையே
மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தென் அரசேஎன் மாலை அணிந் தருளே"[1] என்கிறார்.

உயிர்கொலை செய்பவரும், புலால் உண்பவரும் உறவினர்கள் அல்ல அவர்கள் புறவினத்தவர் என்று இராமலிங்க அடிகளார் கூறுகிறார்.

"வன்புடையார் கொலைகண்டு புலைஉண்பார் சிறிதும்
மரபினர்அன் றாதலினால் வகுத்தஅவர் அளவில்
அன்புடைய என்மகனே பசி தவிர்த்தல் புரிக

அன்றி அருட் செயல்ஒன்றும் செயத்துனியேல் என்றே

இன்புறஎன் தனக்கிசைத்த என்குருவே எனைத்தான்

ஈன்ற தனித் தந்தையே தாயே என் இறையே

துன்பறு மெய்த் தவர்சூழ்ந்து போற்றுதிருப் பொதுவில்

தூயநடத் தரசேஎன் சொல்லும் அணிந் தருளே"[2] என்கிறார்.

கொலை செய்து புலை உண்பவர்கள் சிறிது மரபினர் அல்ல என்கிறார்.

இராமலிங்க அடிகளார்,

"கொடியவரே கொலைபுரிந்து புலைநுகர்வார் எனினும்

குறித்திடும்ஓர் ஆபத்தில் வருந்துகின்ற போது

படியில் அதைப் பார்த்துகவேல் அவர்வருத்தம் துன்பம்

பயந்தீர்ந்து விடுகஎனப் பரிந்துரைத்த குருவே

நெடியவரே நான்முகரே நித்தியரே பிறரே

நின்மலரே என்கின்றோர் எல்லாரும் காண

அடியும் உயர் முடியும் எனக் களித்தபெரும் பொருளே

அம்பலத்தென் அரசேஎன் அலங்கல் அணிந்தருளே"[3] என்கிறார்.

மேலும் "தயை உடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே"[4] என்கிறார்.

ஸ்ரீ நாராயண குருவின் "அனுகம்பா தசகம்"[5] எனும் பாடல் வரிகளும் கருணை நெறிக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடியது ஆகும்.

கருணையுள்ளம் படைத்த கடவுளே! எறும்புக்கும் கூட ஒரு துன்பமும் நேராமல் இருக்க வேண்டும் என வேண்டக் கூடிய கருணையுள்ளமும் உன் திருமெய்யைப் பற்றிய

விடாச் சிந்தனையும் எனக்குத் தந்தருள்வாய் என்கிறார்.[6] எந்த உயிருக்கும் துன்பம் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்றால் கருணையுள்ளம் தேவை என்கிறார்.

அருளால் இன்பம் வந்துவிடும். அன்பு இல்லா நெஞ்சில் எல்லாவிதமான அல்லல்களும் வந்து குவியும். இருள் அன்பை மாற்றிவிடும், அது அல்லலுக்கு கருவாகிவிடும் மற்றவைகளுக்கும் கூட வழி வகுத்துவிடும் என்கிறார் ஸ்ரீ நாராயண குரு.[7]

இராமலிங்க அடிகளாரும் திருவருட்பா பாடலில்,

“தலைவனே இன்றும் என் உளமும்
மலைவில் என் அறிவும் நானும் இவ் வுலக
வழக்கிலே உயிர்இரக் கத்தால்
இலகுகின்றன நான் என்செய்வேன் இரக்கம்
என்னுயிர் என்ன வே றிலையே
நிலைபெறும் இரக்கம் நீங்கில்என் உயிரும்
நீங்கும்நின் திருவுளம் அறியும்”[8] என்கிறார்.

மேலும் “செயல் அனைத்தும் அருளொளியாற் காண்க என எனக்கே திருவுளம் பற்றிய ஞான தேசிகமா மணியே!”[9] என்கிறார்.

ஸ்ரீ நாராயண குரு “அருள், அன்பு, அனுதாபம் ஆகிய மூன்றுக்கும் பொருள் ஒன்றே. அதுவே ஜீவதாரகை ; அருளுள்ளவனே ஜீவி; என்ற ஒன்பது எழுத்து மந்திரத்தை ஜபிப்பதாக”[10] என்கிறார்.

ஒருவரிடம் மற்றொருவர் நேயத்துடன் தொடர்பு கொள்ளும் போது அவனுள் இருக்கும் அருள், அன்பு, அனுதாபம் என்னவென்று தென்படுகிறது எனவே அதற்கு ஒரே சொல்லாக “ஜீவதாரகை” என்கிறார்.

இராமலிங்க அடிகளார், தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். ஆதலால் பெரிய தயவுடைய அறிவே பூரண இன்பமாம். அது ஒப்பற்ற பெருந்தயவுடைய பேரறிவாகும் என்கிறார்.[11]

“ஒருவனிடம் அன்பு இல்லையெனில் அவன் எலும்பு, தோல், குடல், ஆகியவற்றுடன் நாறுகின்ற வெறும் உடம்பு மட்டும் தான். பாலைவனத்தில் தோன்றும் கானல் நீர் போலவும் மனமின்றிக் காய்விடாப்பூ போலவும் அவன் பயனற்றவனாவான்”[12] என்கிறார் ஸ்ரீ நாராயண குரு.

“அன்பின் வழியது உயிர்நிலை, அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு”[13] என்கிறார் திருவள்ளுவர்.

இராமலிங்க அடிகளார் தயவை பற்றி குறிப்பிடும் போது, “என்னை யேறாநிலை மிசை யேற்றி விட்டது யாதெனில் தயவு,தயவு எனும் கருணை தான் என்னைத் தூக்கி விட்டது”[14]என்கிறார்.

ஜீவகாருணிய ஒழுக்கத்தில் தயவின் மூலம் பேரின்ப லாபத்தை அடைந்தவர்களைப் பற்றி குறிப்பிடும் போது, தோல், நரம்பு, என்பு, தசை இரத்தம் சுக்கிலம் முதலிய அசுத்தப்பூத காரியங்களும் அவற்றின் காரணங்களாகிய அசுத்தப் பிரகிருதி அனுக்களுமாகிய தேகத்தை மாற்றி, மாற்று இவ்வளவு என்றறியப்படாத உயர்ந்த பொன்னாகிய சுத்த பூத காரிய தேகத்தையும், பொன்வடிவாக தோன்றுதல் மாத்திரம் அன்றி ஆகாயம் போல் பரிசிக்கப்படாத சுத்த பூதகாரண தேகத்தையும், தோன்றப்படுத்தலுமின்றி ஆகாயம் போல் விளங்குகின்ற ஞானதேகத்தையும் பெற்றவர்களாயிருப்பார்கள் என்கிறார்.[15]

இராமலிங்க அடிகளார் ஜீவகாருணியத்தை பற்றி குறிப்பிடும் போது,

"நம்முடைய தலைவராகிய கடவுளை நாம் அடைவதற்கு அவர் எழுந்தருளி இருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். அவ்வருள் அன்பினாலல்லாது வேறு வகையால் அடைவது அரிது".

"இவ்வன்பு ஜீவகாருணியத்தா லல்லாது வேறு வகையால் வராது".

"ஜீவகாருணியத்தின் இலாபமே அன்பு. அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே ஜீவகாருணியம். இதுதான் முக்தியடைவதற்கு முதற்படியாயிருக்கிறது"[16] என்பது குறிப்பிடதக்கது ஆகும்.

"உடலுக்கு பிறப்பு, நிலைத்தல், வளர்ச்சி, மாற்றம், தேய்தல், முடிவு இப்படி ஆறுவிதமான மாற்றங்கள் வந்து சேரும். ஆனால் அறிவிற்கு அவ்விதம் நேர்வதில்லை. உருவான உடலை விட்டு உயிர் பிரிந்த பின்பும் கீர்த்தியென உருவெடுத்து அனுதாபம் நிலைகொள்ளும்"[17] என்கிறார் ஸ்ரீ நாராயண குரு.

இராமலிங்க அடிகளார், ஒருவன், எல்லா உயிர்களையும் சமமாகக் கருதி, அவற்றிடையே மாறாத அன்பு செலுத்தி, ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால், அவன் அன்புடல் பெறுகிறான். பின், பக்தியினாலும் மாறாத தியானத்தாலும் அவன் உள்ளத்தில் இறைவன் தங்கும் நிலைபெற்ற போது, முன்பு பெற்ற அன்புடல் அருளுடலாக மாறுகின்றது. அதற்குப்பின், மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுங்கால் அருளுடல் பேரின்ப முத்தியிற் கலந்த இன்புடலாகின்றது. இதனை, ஸ்வர்ண தேகம் (பொன்மேனி) என்றும் கூறுகிறார்.[18]

ஸ்ரீ நாராயண குரு கருணை நெறியைப் பற்றி கூறும் போது அனைத்து மதங்களுக்கும் பொதுவான ஒரு நெறியாகக் கூறுகின்றார்,

ஸ்ரீ நாராயண குரு கூற்றுப்படி, " பரம உண்மையைப் பற்றிக் கூறி தேர் ஓட்டுகின்றவனா? ஜீவராசிகளுக்கு கருணைக் கடலாகியவனா? அத்வைத தத்துவத்திற்கு

எளிதான விளக்கம் தந்தருளிய குருவா? யார் இந்த அனுதாப உள்ளம் படைத்தவன்?” [19] என்கிறார்.

“ஆண்மகன் உருவில் உடல் உருவம் பூண்ட தெய்வமா? மனித உருவத்தில் வந்துள்ள தர்மமா? பரமேசனின் புனித மகனா? கருணை படைத்த நபி நாயகம் எனும் முத்து ரத்தினமா” [20] என்கிறார்.

“விபூதியால் ஜீரத்தைக் குணப்படுத்தி அரிதான செயல்கள் பல செய்து காட்டிய மூர்த்தியா? வயிற்று வலியால் அவதிப்பட்ட போது கீர்த்தனை பாடி நோயை குணப்படுத்திய சித்தனா” [21] என்கிறார்.

“ஹரன் என்று எழுதி புகழ்பெற்ற மறையொன்றைத் தந்தருளிய மாமுனியா? மரியாமல் உடலுடன் சென்று விட்டு பரமேசனின் பாதத்தைத் தேடிச் சென்ற பக்தனா?” [22] என்கிறார்.

“பூவுலகில் மனித உருவெடுத்து நடமாடுகின்ற காமதேனுவா? அற்புதமான தானங்களைத் தருகின்ற தேவலோகத்து விருட்சமா இந்த கருணையுள்ளம் படைத்தவன்?” [23] என்கிறார்.

“அருமை மறை ஒதுகின்ற பொருளும் குருவும் முனியும் ஒதுகின்ற பொருளும் ஒரே வகையைச் சார்ந்ததை நினைத்துப் பார்த்தால் அனைத்து வேதங்களுக்கும் பொருளாகியுள்ளது ஒன்றே தான்” [24] என்கிறார் ஸ்ரீ நாராயண குரு.

மேற்கண்ட ஸ்ரீ நாராயண குருவின் அனுகம்ப சதக பாடல் வரிகள் மூலம் கிருஷ்ணன், புத்தர், இயேசு, முகமது நபி, அப்பர், சுந்தரர், ஞான சம்பந்தர், மாணிக்கவாசகர், போன்றவர்களின் நெறியும், எல்லா மதங்களின் நெறியும் ஒன்றே அது ‘கருணை நெறியே’ என்பதை அறிய முடிகிறது.

“மதம் எதுவானாலும் மனிதன் நல்லவனாக இருக்க வேண்டும்” என்று ஸ்ரீ நாராயண குருவும் இராமலிங்க அடிகளாரும் “கருணையே கடவுள்” என்கிறார்.

இராமலிங்க அடிகளார் தம் திருவருட்பா பாடலில்,

“தனித் தலைமைப் பெரும்பதியாகிய பெருங்கருணைக் கடவுளே’
‘கருணாநிதியாகிய கடவுளே’
‘சர்வ வல்லபராகிய தனித் தலைமைக் கடவுளே’
‘எல்லாமாகிய தனிப்பெரும் தலைமை அருட்பெருஞ் சோதி ஆண்டவரே’
‘இயற்கையுண்மைக் கடவுளே’
‘இயற்கை இன்பக் கடவுளே”[25] என்கிறார்.

“கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக”[26] என்கிறார்.

சாதி மத பேதம் இல்லாத கருணை கோட்பாட்டை பின்பற்ற வேண்டும் என்று இராமலிங்க அடிகளாரும், ஸ்ரீ நாராயண குருவும் குறிப்பிடுகின்றனர்.

மேலும் ஸ்ரீ நாராயண குரு “ஜீவகாருணிய பஞ்சகத்தில்”[27] கருணை நெறியைப் பற்றி குறிப்பிடும் போது, எந்த உயிரையும் கொல்லக் கூடாது என உறுதி கொள்வதும் அவற்றின் மாமிசத்தை உண்பதைத் தவிர்ப்பதும் உயர்ந்த பண்பு ஆகும். உயிர் கொலையையும் புலால் உண்பதையும் எந்த மதமும் அனுமதிப்பது இல்லை என்கிறார்.

உயிர்களைக் கொன்று திண்பதில் எவரும் மகிழ்ச்சி அடைவதில்லை எனவே கொல்லாமை என்பது உயர்பண்பு ஆகும். மேலும் நன்கு கற்றறிந்த மனிதர்களின் அறிவு மற்றும் அவர்களின் நற்கூறுகள் மிக உயர்ந்தவையாகவும் எல்லைக்கு அப்பாற்பட்டவையாகவும் உள்ளன. அவர்களின் முடிவு உயிர்களை அழிப்பது தகுதியற்ற

மற்றும் பயனற்ற செயல் என்பதாகும்; நீதிமான்கள் எல்லா உயிர்களும் சமமாகவே பார்க்கின்றனர் என்கிறார்.

இறப்பு என்பது அனைத்து உயிர்களுக்கும் அழைப்பு விடுக்கத்தான் செய்கின்றது. இறப்பு தவிர்க்க முடியாததாக இருப்பதால் அதைப் பற்றிய பயம் மனதில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் எந்த உயிரும் இறப்பதற்கு தாங்களே தயாராகவோ, சம்மதமோ, கொடுப்பதில்லை. மாமிசம் யாராலும் உண்ணப்படாத போது எந்த உயிரும் கொல்லப்படாது. புலால் உண்பவர், கொலை செய்பவர், அதற்கு உடந்தையாய் இருப்பவர் இவர்கள் மூவரும் தண்டனைக்கு உரியவர்கள் என்கிறார்.

மனிதன் மிருகத் தன்மையின் தூண்டுதலால் தான் கொலை செய்கிறான். கொல்லாமை என்பது மனிதனின் நற்பண்பு ஆகும். "நீ மற்றும் நான்" என்பது இரண்டு அல்ல ஒன்று எனவே எந்த உயிரையும் கொல்லக் கூடாது, புலால் உண்ணக் கூடாது என்கிறார் ஸ்ரீ நாராயண குரு.

இராமலிங்க அடிகளார் திருவருட்பா பாடலில்,

> "....... என் உயிர்தான் உயிர் இரக்கந்தான்
> ஒன்றதே இரண்டிலை இரக்கம்
> ஒருவில்என் உயிரும் ஒருவும்...." [28] என்கிறார்.

> "..... புலை கொலை இரண்டும்
> ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க...." [29] என்கிறார்.

எனவே இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் கருணைக் கோட்பாடுகள் உயிரை கொல்லாமல் இருப்பதும், புலால் உண்ணாமல் இருப்பதும் என்பதை அறிய முடிகிறது.

## 5.2. சாதி

சாதிப் பிரிவினைகளை இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குரு இருவரும் எதிர்பவர்கள் ஆவர்.

இராமலிங்க அடிகளார் தமது திருவருட்பா பாடலில்,

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தல்அவர் தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே" [30] என்கிறார்.

"சமயம் குலமுதல் சார்பெலாம் விடுத்த
அமயந் தோன்றிய அருட்பெருஞ் ஜோதி" [31] என்கிறார்.

"சாதியும் மதமும் சமயமும் காணா

ஆதிஅ னாதியாம் அருட்பெருஞ் ஜோதி” [32] என்கிறார்.

“சாதியும் மதமும் சமயமும் பொய் என
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் ஜோதி” [33] என்கிறார்.
“சாதி சமயச் சழக்கைவிட் டேன்அருட்
சோதியைக் கண்டேனடி – அக்கச்சி
சோதியைக் கண்டேனடி” [34] என்கிறார்.

சாதிய வேறுபாடு நீங்கும் போது தான் இறை அனுபவம் நிலை கிடைக்கும் என்கிறார் இராமலிங்க அடிகளார்.

ஸ்ரீ நாராயண குருவும் சாதி வேறுபாடு நீங்க வேண்டும் என்கிறார்,

ஞானம் என்ற கடலிலிருந்தே நாம் காணுகின்ற அனைத்தும் உருவாகியுள்ளது. தோற்றம், மொழி, தேசம் என்ற பேதங்களால் சாதி என்ற மாற்றம் உருவாவதில்லை என்கிறார்.[35]

மேலும் ஸ்ரீ நாராயண குரு சாதி வேறுபாடுகள் நீக்கினால் தான் பேரின்ப நிலையை அடைய முடியும் என்கிறார்.

ஸ்ரீ நாராயண குரு “நிர்விருதி பஞ்சகம்” [36] பாடலில்,

பெயர் என்ன தேசம் எது சாதி என்ன
வயது எவ்வளவு?
இம்மாதிரி கேள்விகளைக் கடந்தவன் யார்
அவனுக்கு மட்டுமே இந்த பேரின்பம்

வாரீர், போவீர், போக வேண்டாம்

உள்ளே நுழைவீர், எங்கு விரைகிறீர்

இம்மாதிரி உரை முறைகளைக் கடந்தவன் யார்

அவனுக்கே இந்த பேரின்பம்

எங்கே போகிறீர், எப்போது வந்தீர்

எங்கிருந்து வருகிறீர், யார் நீவீர்

இம்மாதிரி கேள்விகளை கடந்தவன் யார்?

அவனுக்கே அந்த பேரின்பம்

நான் நீ அவன்

இது அகம், இது புறம்

இல்லையா, இருகிறதா

இவ்வாறு வாதங்ககெளல்லாம்

அடக்கியவன் யார்,

அவனுக்கே பேரின்பம்

தெரிந்ததும் தெரியாததும் சமம்

தனது மற்றவனது என்னும் பேதம் இல்லை

அப்போது வேறுபாடு எங்கே?

இம்மாதிரி விவாதங்களில் இருந்து விடுதலை பெற்றவன்

எப்போதும் பேரின்பத்தில் வாழ்கிறான் என்கிறார்.

இராமலிங்க அடிகளாரும் மற்றும் ஸ்ரீ நாராயண குருவும் சாதி முதலிய பேதங்கள் நீங்கினால் ஏற்றத்தாழ்வுகள் நீங்கி மனிதன் பேரின்ப நிலையை அடையமுடியும் என்கின்றனர் என்பதை அறியமுடிகிறது.

## 5.3. மதம்

இராமலிங்க அடிகளாரின் “சமரச சுத்த சன்மார்க்கம்” மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் “ஒரு மதம்” எனும் கொள்கைகள் தற்போதுள்ள மதங்களில் ஏதாவது ஒன்றோ அல்லது தனியான ஒரு மதமோ அல்ல. அது அனைத்து மதங்களையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் சமமாகக் கருதக் கூடிய ஒரு நிலைப்பாடு ஆகும்.

இராமலிங்க அடிகளார் திருவருட்பா பாடலில்,

“எம்மதம் எம்இறை என்ப உயிர்த்திரள்
அம்மதம் என்றருள் அருட்பெருஞ் ஜோதி” [37] என்கிறார்.

“அகமென்றும் புறமென்றும் அகப்புறம்
புறப்புறம் என்றும் கூறப்படும் சமயங்கள்
நான்கனுள் ஒன்றையும் நான்புறக்கணித்ததில்லை
ஏகதேசமாக ஒன்றாக கொண்டேன்” [38] என்கிறார்.

“எம்மத நிலையும் நின்னருள் நிலையில்
இலங்குதல் அறிந்தனன் எல்லாம்
சம்மதம் ஆக்கிக் கொள்கிறேன்” [39] என்கிறார்.

இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா பாடல் வரிகள் பல் சமயத்தையும் அங்கிகரிப்பதாக உள்ளது.

ஸ்ரீ நாராயண குருவும் அனைத்து மதங்களின் இலட்சியம் ஒன்று என்பதால் எல்லா மதங்களும் ஒன்று என்கிறார்,

“ஒரு மதமாய் உலகெங்கும் ஆக்கிடுவோம் என்போர் உரைக்கின்ற மறுப்புரைகள் பிளவே உண்டாகும் பிற மதங்கள் தமைப்பழியார் சமயங்கள் யாவும் பேசுகின்ற உண்மைப் பொருள் ஒன்றென்று உணர்ந்து கொண்ட நல்லோர்” [40] என்கிறார்.

மேலும் ஸ்ரீ நாராயண குரு “பல மதங்கள் பகர் வேத சாரமொன்றே என்று அறியாமல் யானையைக் கண்ட குருடர்களைப் போல உலகில் பலவிதமாய் சொல்லுகின்றவர் கூற்றில் பலியாகமல் உண்மையிலே நிலைத்து இருக்க வேண்டும்” [41] என்கிறார்.

இராமலிங்க அடிகளார் மதத்தைப் பற்றிக் கூறும் போது யானையை பற்றி அறிந்த குருடர்களைப் போல் தாம் அறிந்ததே உண்மை என்பது போல, ஒரு மதத்தை மட்டும் பின்பற்றுதல் மற்ற மதங்கள் கூறுவது பொய் என்று கூறாமல் அனைத்து மதங்களும் குறிப்பிடுவது ஒரே உண்மைப் பொருளைத்தான் என்கிறார்.

திருவருட்பா பாடலில்,

“எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச்சாத் திரங்கள்
எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் எனது
கைவகையே கதறுகின்றீர் தெய்வம் ஒன்றென் றறியீர்
கரிபிடித்துக் கலக்கமிட்ட பெரியரினும் பெரியீர்....” [42] என்கிறார்.

மேற்கண்ட இராமலிங்க அடிகளாரின் பாடல் வரிகள் தெய்வத்தை அடைவதற்கான மார்க்கம் பல என்றாலும் தெய்வம் ஒன்று எனவே அதை அடைவதற்கான மதங்களும் ஒன்று, பல்

சமய சூழ்நிலையில் மதங்களிடையே சகிப்புத் தன்மையை ஏற்படுத்த இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் இத்தகைய கருத்துக்கள் மிக முக்கியமானது ஆகும்.

மதத் தலைவர்கள் கண்ட உண்மைப் பொருள் ஒன்று தான், ஆனால் அதை மற்ற மக்களும் பின் பற்றி அடைய வேண்டும் என்று ஏற்படுத்தப்பட்ட மதங்கள் பல, நதிகள் பல என்றாலும் இறுதியில் ஒரே கடலையே சென்று அடைவது போல மதங்கள் பல என்றாலும் ஒரே இறைவனைச் சென்று அடைவதாலும், மதங்களின் உண்மைப் பொருள் ஒன்று என்பதாலும் எனது மதம் உயர்ந்தது, உனது மதம் தாழ்ந்தது என்று கருதாமல் எல்லா மதத்தின் சாரம் ஒன்றுதான் எனவே மதமும் ஒன்று என்கின்றனர். இவையே இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் மதம் குறித்த கருத்தாக அமைகிறது.

## 5.4. கடவுள்

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவைப் பொருத்தவரை தெய்வம் ஒன்றே ஆகும்.

இராமலிங்க அடிகளார் தம் திருவருட்பா பாடலில்,

"பிரம்மம் என்றும் சிவம் என்றும் பேசுகின்ற நிலைதான்
பெருநிலையே இந்நிலையில் பேதமுண்டோ எனவே
தரம்அறிய வினவுகின்றாய் தோழி இது கேள் நீ
சமரச சன் மார்க்கநிலை சார்தி எனில் அறிவாய்
திரமுறவா யினும் எல்லாம் ஆகி அல்லா தாகும்
திருவருளாம் வெளிவிளங்க விளங்கு தனிப் பொருளாம்

சிரமுறும் ஓர் பொது உண்மைச் சிவம் பிரம முடியே
திகழ்மறை ஆகமம் புகழும்திறன் இது கண்டறியே" [43] என்கிறார்

"தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின்றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச் சமயாதியை மெச்சுகின்றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கம் ஒன் றில்லார்
மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித் தவர்கறி வருள்வீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே" [44] என்கிறார்.

மேற்கண்ட இராமலிங்க அடிகளாரின் பாடல் வரிகள் மூலம் கடவுள் ஒருவர் என்பதை அறியமுடிகின்றது.

இராமலிங்க அடிகளார் கூற்றுப்படி,

"சிவமயமே வேறில்லை எல்லாம் நீதானே..." [45] என்கிறார்.

ஸ்ரீ நாராயண குருவும் ஒரு கடவுளையே குறிப்பிடுகிறார். ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு கடவுள் மனிதனுக்கு என்பதாகும்.

கடவுளைப் பற்றி ஸ்ரீ நாராயண குரு ஆத்மோபதேச சதகத்தில்,

"படைப்பவன் நீயே மற்றும்
படைத்திடும் பொருளும் நீயே

படைத்திடும் தொழிலும் நீயே

படைத்திடும் நெறியும் நீயே" [46] என்கிறார்.

மேற்கண்ட ஸ்ரீ நாராயண குருவின் பாடல் வரிகள் தெய்வம் ஒன்றெனவும் படைப்பவனாகவும் அவனே தன் படைப்பாகவும் உள்ளான் என்கிறார்.

இராமலிங்க அடிகளார் கூற்றுப்படி,

சிவம் என்பதற்குப் பொருள் ஸச்சிதானந்தம், ஸச்சிதானந்தம் என்பது ஸத்து – சித்து – ஆனந்தம், சி – சத்து, வ– சித்து, ம்–ஆனந்தம்,சி–எல்லாம் உள்ளதாய் விளங்குவது, வ– எல்லா விளங்குவதாய் உள்ளது, ம்–இந்த இரண்டினுலும் நிரம்பிய இன்பம் என்கிறார்.[47]

மேலும் சிவ என்பதற்குப் பொருள், அனாதியாய் மலமில்லாத சர்வ வல்லமையுடையது. ∀சி∍ என்பதற்குப் பொருள் அனாதியாய் மலமில்லாதது. ∀வ∍ என்பதற்குப்பொருள் சர்வ வல்லமையுடையது என்கிறார் இராமலிங்க அடிகளார்.[48]

ஸ்ரீ நாராயண குருவின் ஆத்மோபதேச பாடல் வரிகளும் கடவுள் சச்சிதானத்தமாக உள்ளார் என்கிறது.

"அதுவல்ல, இதுவல்ல, அகப்பொருளும் அல்ல

ஆனந்தாமுதமென்று பரம்பொருளைத் தெளிந்து

அசத்து சத்தென்கின்ற பேதமெலாம் களைந்து

ஆழ்ந்திடுக ஓமென்னும் நாதத்தில் மெதுவாய்!"[49] என்கிறார்.

எனவே இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீநாராயணகுருவைப் பொருத்தவரை கடவுள் ஒருவர் உண்டு என்றும் அவர் சச்சிதானந்தமாக உள்ளார் என்றும் அறிய முடிகிறது.

## 5.5. கோயில்கள்

இராமலிங்க அடிகளார் கடவுளைப் பற்றிக் கூறும் போது உண்மையில் "கடவுள்" எனப்படுவது அகிலமாம் – அன்பாம். அஃது, உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூர ணசமாதானத்தையும் சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலை நிறுத்துகின் றதுஎன்கிறார்.[50]

பசுவின் உடம்பு முழுவதும், பால் இரத்தமாக நிறைந்திருப்பினும் அதன் மடியில் தான் அது பாலாக வெளிப்படுவது போல, எங்கும் நிறைந்திருக்கிற இறைப் பேராற்றல் திருக்கோயில்களில் தான் மக்கள் விரும்பும் வடிவம் பெற்று அருள் பொழிகிறது என்று நம் முன்னோர்கள் கருதிய கருத்துக்களின் விளைவாக்கங்கள் நம் திருக்கோயில்கள் ஆகும்.[51]

ஸ்ரீ நாராயண குரு அருவிப்புரத்தில் சிவலிங்க பிரதிஸ்டை செய்த பின்னர் அஞ்சுதேங்கூ, முறுக்கம்புழா, குளத்தூர், சேர்தலா, இறிஞ்சலக்குடா, பல்லுருத்தி, சேராய், திருச்சூர், பாலக்காடு, கோழிக்கோடு, தலச்சேரி, கண்ணனூர், மங்களபுரம் மற்றும் வர்கலாவில் சாரதா கோயில்களை நிறுவிடச் செய்தார்.[52]

ஸ்ரீ நாராயண குரு கட்டளைப்படி கட்டப்பட்ட கோயில்கள் சிறதளவு இருந்தாலும் சுத்தமாக இருக்க வேண்டும், மன அமைதிக்கு வேண்டிய அழகிய அமைதியான சுற்றுப்புறச் சூழல்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். இருளடைந்த மூலஸ்தலங்கள் இருக்க கூடாது என்பதாகும்.[53]

கோயிலில் கண்டிப்பாக நூலகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்கிறார். மேலும் கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்களுக்குத் தேவையான மத நூல்களை எடுத்துப் படித்து அறிந்து கொள்வார்கள். மன அமைதியும், அறிவு வளர்ச்சியும் வளர்க்கும் இடங்களாக கோயில்கள் இருக்க வேண்டும், உடல் ஆரோக்கியம் தேவை அளிப்பதாக இருக்க வேண்டும் என்கிறார்.

ஸ்ரீ நாராயண குரு 1922ல் திருவனந்தபுரத்துக்கு அருகிலுள்ள முருக்கும் புழாவில் “சத்தியம், தர்மம், தயை, அன்பு”[54] என்று எழுதப்பட்ட பலகை வைத்து வழிபடச் செய்தார் என்பது குறிப்பிடதக்கது ஆகும்.

திருச்சூருக்கு அருகில் கரமுக்கு எனும் இடத்தில் ‘ஜோதி’ வழிபாட்டை ஏற்படுத்தினார். 1927 இல் களவங்கோட்டம் எனும் இடத்தில் நிலைக்கண்ணாடியில் “ஓம்” என்று எழுதி வழிபடச் செய்தார். இது “பிரணவ பிரதிஸ்டை” என்படும்.[55]

ஸ்ரீ நாராயண குரு அறிவு (knowledge) ஒன்று மட்டுமே கடவுளாகக் கொண்டார். ஆனால் கோயில்களில் தான் தெய்வீகத் தன்மை அதிகமாக வெளிப்படும் என்றும், மக்கள் அனைவரும் எந்த வித ஏற்றத்தாழ்வு (சாதி) இல்லாமல் வழிபடவும், தீண்டாமையை ஒழிக்கவும் ஸ்ரீ நாராயண குரு கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு, இலங்கை போன்ற இடங்களில் கோயில்களை பிரதிஸ்டை செய்தார்.

தீட்டு என்று உயர் சாதியினரால் ஒதுக்கப்பட்டு கோயில் அருகில் கூட அனுமதிக்கப்படாதவர்களாயிருந்த புலைய இன மக்களை ஸ்ரீ நாராயண குரு தாம் கட்டிய கோயில்களில் அர்ச்சகர்களாக நியமித்து தீண்டாமையை போக்கிடச் செய்தார்.[56]

இராமலிங்க அடிகளார் கடவுளை, ஒளி ( அருட்பெருஞ்சோதி ) வழிபாட்டில் வழிபடுவதற்காக 25.01.1872 ஆம் ஆண்டு அமைத்ததே “சத்திய ஞானசபை” ஆகும். சத்தியஞானசபை அமைக்கப்பட்ட வடலூருக்கு“உத்தர ஞான சிதம்பரம்” என்று பெயரிட்டார்.[57]

இராமலிங்க அடிகளார் ஞானசபையைப் பற்றி குறிப்பிடும் போது இயற்கை விளக்கம் என்கின்ற சத்திய ஞான சபைக் கண்ணே, இயற்கை உண்மை என்கின்ற சத்தியத் திருவுருவினராய், இயற்கை இன்பம் என்கின்ற சத்தியத் திருநடஞ் செய்தருள்கின்ற இயற்கைத் தனிப் பெருங்கருணைத் தனிப் பெரும்பதியாகிய தனித்தலைமைக் கடவுளே! என்கிறார்.[58]

"சத்திய ஞானசபை என்னுள் கண்டனள்

சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக் கொண்டனள்" [59] என்கிறார்.

ஞான சபை வழிபாட்டு முறையாக,

"வடலூர் சத்திய ஞான சபையில் அமைந்துள்ள

பெரியதோர் கண்ணாடியின் எதிரில் சோதியாகிய

திருவிளக்கு உள்ளது; அந்த சோதியைத் தரிசிப்பதற்குத்

தடையாக அமைந்துள்ள திரைகள் ஏழு

வழிபாட்டின் போது அந்த ஏழு திரைகளும்

ஒன்றன்பின் ஒன்றாக நீக்கப்பெறும்

பின்னர் சோதி தரிசனம் கிடைக்கும்" [60] என்கிறார்.

சத்திய ஞான சபை என்பது ஏழு திரைகள் விளக்கப்பட்டு கண்ணாடியில் ஒளியின் பிம்பத்தை தரிசிப்பது ஆகும். இதன் பொருள் ஒவ்வொரு மனிதனின் உள்ளும் உள்ள ஏழு திரைகள் விளக்கப்பட்டு தன்னுள் ஒளிரும் சோதியை தரிப்பதை குறிப்பதாக இராமலிங்க அடிகளாரால் சத்திய ஞானசபை அமைக்கப்பட்டது.

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சோதி மற்றும் நிலைக் கண்ணாடி வழிபாடு என்பது கடவுள் எல்லா உயிர்களிலும் உள்ளான் தன் உயிரிலும் இருகிறான், என்பதை உணரவும் அனைத்தும் ஒரே ஞானமாகிய கடலில் இருந்து தோன்றியது என்ற ஸ்ரீ நாராயண குருவின் கருத்தும். இராமலிங்க அடிகளாரின் ஞானசபை கருத்தும் இத்தகைய வழிபாட்டு முறையை விளக்குவதாக அமைகின்றது.

மேலும், இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குரு கோயிலை ஏற்படுத்தியதன் நோக்கம் மனிதர்களிடையே சாதி, சமய வேறுபாடு, ஆண், பெண் பாகுபாடு நீங்குவதற்கான வழிவகை ஆகும்.

## 5.6. கல்வி

இராமலிங்க அடிகளார் 1867 ஆம் ஆண்டு "சன்மார்க்க போதினி" என்னும் பாடசாலையொன்றை நிறுவினார். 'இப்பாடசாலை சிறுவர் முதல் முதியோர் வரை அனைவர்க்கும் கல்வி கற்பிப்பது; தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பிக்கும் மும்மொழிப் பாடசாலை ஆகும்' [61]

தமிழ் நாட்டில் மும்மொழிப் பாடசாலையை முதன் முதலில் ஏற்படுத்தியவர் வள்ளலாரே ஆவார்.[62]

தமிழ் நாட்டில் முதியோர் கல்வியை முதன் முதலில் ஏற்படுத்தியவர் வள்ளற்பெருமான் இராமலிங்க அடிகளாரேயாவர் என்பது குறிப்பிடதக்கது ஆகும்.[63]

ஸ்ரீ நாராயண குருவும் முதியோர் கல்வியை ஏற்படுத்தினார் என்பது குறிப்பிடதக்கது ஆகும்.[64] 1904 ஆம் ஆண்டு அரிஜன மக்களுக்காக சிவகிரியில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார்.[65]

பொது மக்களுக்காக முதன் முதலில் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் வள்ளள் பெருமானே ஆவார்.[66] ஸ்ரீ நாராயண குரு திருக்குறளை மலையாளத்தில் மொழி பெயர்த்தார் என்பது குறிப்பிடதக்கது ஆகும்.[67]

மேலும் 11-1-1872 ல் சமரச வேத பாடசாலையை இராமலிங்க அடிகளார் துவக்கினார்.[68]

"இதில் வாசிக்க விரும்புகிறவர்கள் பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களாகிய, நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரண வடக்கம் முதலிய நற்குண வொழுக்கங்களையும், உண்மையுரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்குபகரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்களையும் பெற்று சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாகியிருத்தல் வேண்டும்.

இதில் வாசிக்கின்றவர்களுக்கு சிலகாலம் வாசித்து, ஒருவாறு வாசிப்பிற் பயிற்சி நேரிட்டால், அந்தப் பயிற்சிக்கும் அவரவர்கள் குடும்பத்திற்கும் தக்கபடி மாதந்தோறும் பொருளுதவி செய்யப்படும். காலை மாலை சுமார் ஐந்தைந்து நாழிகை வாசித்தல் வேண்டும். திருச்சிற்றம்பலம்".[69]

மேற்கண்ட இராமலிங்க அடிகளாரின் கருத்து கல்விக்கு உதவித்தொகை தந்து கல்வியை வளர்பதற்கு உதவுகிறது என்பதை அறியமுடிகிறது.

ஸ்ரீநாராயண குரு ஜாதிய ஏற்றத்தாழ்வை போக்குவதற்கு கோயில்கள் மட்டும் போதாது மக்கள் கல்வியாலும் விழிப்படைய வேண்டும் ஏராளமான கோயில்களை கட்டி வந்த ஸ்ரீ நாராயண குரு 1927 ஆம் ஆண்டு கட்டிய களவங்கோட்டம் கோயிலுக்கு பிறகு கோயில்கள் கட்டுவதை நிறுத்திவிட்டார்.

ஸ்ரீ நாராயண குருவின் கூற்றுப்படி,

நமக்கு விருப்பமில்லை, நாம் வரவில்லை பள்ளிக் கூடங்களையும் தொழிற்சாலைகளையும் கட்டுங்கள் கோயில்கள் இனி வேண்டாம் என்கிறார்.[70]

அடுத்த முறை இந்த கிராமத்தில் கோயில் கட்டக் கூடாது. அதற்கு பதிலாக பள்ளிக் கூடம் கட்ட வேண்டும். கல்வி அறிவு மக்களுக்குத் தேவை, காரணம் கல்வி என்பது மனிதனை பகுத்தறிவுப் பாதையில் சிந்திக்க வைக்கின்றது. எனவே கோயில்களை விட

மனித இனத்திற்கு பள்ளிக்கூடங்கள் தான் அவசியம் அதன் அடிப்படையில் ஆங்காங்கே பள்ளிக்கூடங்கள் நிறுவிட ஏற்பாடு செய்தார்.[71]

கோயில்களைக் கட்டுவதை இனிமேல் உற்சாகப்டுத்தக் கூடாது. ஆங்காங்கே பல கோயில்களைக் கட்டுவதனால் கோயில்கள் மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை இழக்கப்படுகின்றது. இப்படிப்பட்ட கோயில்களைக் கட்டுவதால் ஏராளமான பணம் வீணடிக்கப்படுகிறது என்கிறார்.[72]

பள்ளிக் கூடங்களைக் கட்டுவதால் கல்வி பெற வாய்ப்புண்டு ஒவ்வொரு மனிதனும் கல்வியைப் பெற்று விட்டால் அவன் பரந்த உலகை, அறிவைக் கொண்டு பார்ப்பான். இந்த கல்வி ஒன்று தான் மனித சமுதாயத்தை ஒன்றிணைக்கும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு என்கிறார்.[73]

சாதியை ஒழிக்க சிறந்த இடமே பள்ளிக்கூடங்கள், அந்த வகையில் ஸ்ரீ நாராயண குருவால் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடம் இன்றளவும் ஸ்ரீநாராயணகுரு சென்ட்ரல் பள்ளி எனும் பெயரில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடதக்கது ஆகும்.[74] 1915 ஆம் ஆண்டு “சமஸ்கிருத பாடசாலையை” ஏற்படுத்தினார்.[75]

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் கூற்றுப்படி மனிதனுக்கு கல்வி அறிவு மிகவும் அவசியம் என்பதையும் அதற்காக கல்வி நிறுவனங்களை ஏற்படுத்திக் கொடுத்து மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தினர் என்பதையும் அறியமுடிகிறது.

## 5.7. அறம்

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குரு மனிதன் தன் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளை கூறியுள்ளனர்.

## I) இராமலிங்க அடிகளார் கூறும் அறம்

இராமலிங்க அடிகள் சமரச சுத்த சன்மார்க்க பெருநெறி ஒழுக்கமாக கூறுவது. 1.இந்திய ஒழுக்கம், 2.கரண ஒழுக்கம், 3.ஜீவ ஒழுக்கம், 4.ஆன்ம ஒழுக்கம் ஆகும்.[76]

### இந்திய ஒழுக்கம்

நாத முதலிய தோத்திரங்களை உற்றுக் கேட்டல், மற்றவை கேளாதிருத்தல், கொடுஞ்சொல் முதலியவை செவிபுகாமல் நிற்றல், அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல், கொரூரமாகப் பாராதிருத்தல், ருசியின் மீது விருப்பமின்றி இருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல் என்னும் ஞானேந்திரிய ஒழுக்கம்.

இனிய வார்த்தையாடுதல், பொய் சொல்லாதிருத்தல் ஜீவஹிம்சை நேரிடுங்கால் எவ்விதத் தந்திரத்திலாவது தடை செய்தல், பெரியோரிடத்தில் செல்லுதல் என்றால், சாதுக்களிடம் பரிச்சயம் பண்ணுதல், உயிர்க்கு உபகரிக்கு நிமித்தஞ் சஞ்சரித்தல், உயிருக்கு உபகார நிமித்தம் கையால் உபகரித்தல், மலஜல உபாதைகள் அளவு மீறாமலும் கிரமங் குறையாமலும் அளவை போல் தந்திர ஒஷதிகளாலும், ஆகாரப் பக்குவத்தாலும், பவுதிகப் பக்குவத்தாலும் செய்வித்தல் என்னும் கருமேந்திரிய ஒழுக்கம் ஆகும்.

### கரண ஒழுக்கம்

சிற்சபையின்கண் மனத்தைச் செலுத்துவது தவிர மற்றெந்த வகை ஆபாசத்திலும் செலுத்தாமல் இருந்து மேற்குறித்து இடத்தில் நிறுத்துதல், பிறர் குற்றம் விசாரியாதிருத்தல், தன்னை மதியாதிருத்தல், செயற்கைக் குணங்களால் உண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவமயமாயிருத்தல், பிறர் மேற்கோபியாதிருத்தல், தனது சத்துருக்களாகிய தத்துவங்களை கோபித்தல், அக்கிரம அதிக்கிரம புணர்ச்சி செய்யாதிருத்தல் முதலியனவாம்.

## ஜீவ ஒழுக்கம்

எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், குலம், கோத்திரம், சூத்திரம், சாஸ்திரம், தேசம், மார்க்கம், உயர்வு, தாழ்வு முதலிய பேதமற்றுத் தானாக நின்றல் முதலியனவாம்.

## ஆன்ம ஒழுக்கம்

எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிடத்தும் உள்ள ஆன்மாக்களிடத்தும் இரங்கி, ஆன்மாவே சபையாகவும் அதன் உள்ளொளியே பதியாகவும் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் முதலியனவாம்.

நால்வகை நெறிகளைக் கூறிய அடிகளார், அவற்றோடு இன்னும் சில, மனிதன் பின்பற்ற வேண்டிய நியதிகளையும் கூறியுள்ளார்.

இவ்வண்ணமான ஒழுக்கங்களில் இயன்ற மட்டில் ஒழுகப் பெற்று, இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம் பராவல், பிறவுயிர்க்கிரங்கல், பெருங்குணம் பற்றல், பாடிப் பணிதல், பக்தி செய்திருத்தல் முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப் பழகி இருத்தல் வேண்டும் என்கிறார் இராமலிங்க அடிகளார்.[77]

மேலும் இராமலிங்க அடிகளார் மனிதன் தன் உடம்பை காப்பாற்றுவது அவசியம் என்கிறார்.

“ஒரு மனிதன் தன்னை ஸர்வ ஜாக்கிரதையுடன் காக்க வேண்டும். இல்லையாயின் அதி சீக்கிரத்தில் மரணமடைவான் சந்தேகமில்லை.

**தூக்கத்தை ஒழித்தால் ஆயுசு விருத்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாளிகை தூக்கப் பழக்கஞ் செய்வானானால், அவன் ஆயிரம் வருடஞ் சீவித்திருப்பான்.**

**பகலில் போஜனஞ் செய்தவுடன் சற்றே படுத்தெழுந்தல்லாது வேறு காரியங்களிற் பிரவேசிக்கப்படாது. ஆயினும் நித்திரை வரும்படி படுக்கப்படாது. பகலில் எந்த வகையிலும் நித்திரையாகாது.**

**இரவில் தீபமில்லாத இடத்தில் இருக்கப்படாது. ஏனெனில், அஃது பிராண நஷ்டம் பண்ணும். ஆதலால், நமது கிருகத்தில் தீபம் வைத்து இருளைப் போக்கி ஆனந்தமயமாய் நித்திரையில்லா திருத்தல், ஆயுள் விருத்தியாம் இஃது சாத்தியனுக்கு.**

**சாதகன் ஒருவாறு நித்திரை செய்தல் வேண்டும். கிருகத்தில் இருளில்லாது எங்கும் பிரகாசமாய் தீபம் வைத்தால், மேற்படி இருள் அந்த தீபத்தில் அடங்கும். அது போல் ஜீவ தீபமாகிய நாம் வசிக்கிற கிருகத்தில் பிரகாசமில்லாவிட்டால், மேற்படி இருள் ஜீவ பிரகாசமாகிய நம்மிடத்தில் சேர்ந்து நஷ்டத்தைப் பண்ணும். அதுபோல, ஆன்மவாசமாகிய இந்தத் தேகமாகிய கிருகத்தில் அருட்பிரகாசமில்லாது மருளாகிய அஞ்ஞானசம்மந்தமுடைய இருள் சேர்ந்தால், பிராண நஷ்டம் சீக்கிரமாம்"[78] என்கிறார்.**

## II) ஸ்ரீ நாராயண குரு கூறும் அறம்

**ஸ்ரீ நாராயண குரு மனிதன் கடைபிடிக்க வேண்டிய அறநெறிகளாக "அஹிம்சை, சத்தியம், பிறர்பொருள் களவாமை, விபச்சாரம் செய்யாமை, கள்ளுண்ணாமை"[79] போன்றவற்றையும் சுத்தி பஞ்சகத்தில் உடல் சுத்தம், வாக்கு சுத்தம், மனசுத்தம், புலன்கள் சுத்தம், வீட்டு சுத்தம் போன்றவற்றை வழியுறுத்துகின்றார்.**

### அஹிம்சை

ஸ்ரீ நாராயண குரு ஐந்து வகையான தர்மத்தைப் பற்றி கூறுகிறார் அதில் எல்லா தர்மங்களிலும் முதன்மையானது அஹிம்சை ஆகும். ( மனதாலும், வாக்காலும், செயலாலும் பிற ஜீவன்களை வேதனைப்படுத்தக் கூடாது ) கடினமான விரதங்களை கடைப்பிடித்த கௌதம புத்தரைப் போன்ற மகாத்மாக்கள் அஹிம்சையைப் பின்பற்றி மேன்மையான மோட்சத்தை அடைந்தனர். தர்மத்தின் உயிர் நாடியே அஹிம்சையென்றும், எல்லாவிதமான அதர்மங்களும் ஹிம்சை ( பிற உயிர்களை வேதனைப்படுத்துவது ) மூலமே ஏற்படுகிறது என்று தர்மத்தை உணர்ந்த ஞானிகள் நமக்கு உபதேசிக்கிறார்கள். அஹிம்சையை பின்பற்றுபவரின் மீது எல்லா உயிரினங்களும் மகிழ்வோடு தாயைப் போல அன்பும் நம்பிக்கையும் கொள்கின்றன என்கிறார்.

## சத்தியம்

சத்தியம் என்பது எங்கும் நிறைந்திருக்கும் பிரம்மமே ஆகும். இந்த உலகம் சத்தியத்திலேயே செல்கிறது. எல்லோரும் உண்மையே பேச வேண்டும். ஒருபோதும் பொய் கூறக்கூடாது. சத்திய வழியில் நடக்கிறவன் ஒரு யோகி ஆகிறான். அவனுடைய வாக்குகள் பலிக்கின்றன.

## பிறர் பொருள் களவாமை

அடுத்தவருடைய பொருளை அபகரிக்காமல் இருப்பதும், அது குறித்துள்ள எண்ணங்களை தன்னகத்தே கொள்ளாமல் இருப்பது அஸ்தேயம் ஆகும். திருடுதல் ஆபத்துக்களை உருவாக்குகிறது. களவு செய்யாதவர்க்கு ஐஸ்வர்யம் கிடைக்கும்.

களவால் அவமானம் ஏற்படும். வார்த்தையாலும், செய்கையாலும் களவு செய்யாதவனை சமுதாயம் முழுமையாக நம்புகிறது. களவு செய்கின்ற செய்கை உள்ளவனை, சமுதாயத்தில் உள்ள நல்லவர் அனைவரும் விலக்கி ஒதுக்குகின்றனர்.

## விபச்சாரம் செய்யாமை

அன்னிய மாதர்களை காம எண்ணங்களோடு பார்பதும், சல்லாபம் செய்வதும், உறவு கொள்வதும் விபசாரம் ஆகும். இத்தகைய சீர் கெட்ட குணத்தைக் கொண்டவர்களுக்கு நன்மதிப்பு, மானம், பொருள், அறிவு, குலப்பெருமை, உயிர் இவை அனைத்தும் விரைவிலேயே அழிந்துவிடும். ஒரு விபச்சாரிக்கு பகல் பொழுதும் இருட்டாகவே இருக்கும். ஆகையால் அவருக்கு இயற்கையாகக் கிடைக்கக் கூடிய சந்தோஷம் கூட இல்லாமல் போகும். தனது மனைவி அடுத்தவர்களுடன் உறவு கொண்டிருப்பதை எந்த மனிதனும் விரும்பவோ ஏற்றுக் கொள்ளவோமாட்டான். ஆகையால் இந்த உலகிலும் மறு உலகிலும் அமைதியை விரும்புகிறவர்கள் விபச்சாரத்தைப் புறக்கணிக்க வேண்டும்.

## கள்ளுண்ணாமை

மது, புத்தியைப் பேதலிக்க வைக்கக் கூடியதும், விஷம் போன்ற கொடுமையான பொருளுமாகும். ஆகையால் மது அருந்தக் கூடாது, போதை பொருட்கள் கஞ்சா, புகையிலை, அபின் போன்றவைகளைத் தவிர்க்க வேண்டும். அறிவுடையவர்கள் எவரும் போதைப் பொருட்களை வாங்கவோ, விற்கவோ, பரிமாற்றம் செய்து கொள்ளவோ, சேமிக்கவோ கூடாது. அது குறித்து எந்த உறவும் மகாபாவம் ஆகும். போதையினால் அறிவு பேதலித்து, மானமிழந்தவருக்கு அறிவில் குறைந்த சிறார்கள் கூட மரியாதை தருவதில்லை.இத்தகையவரை அறிவுடையவர்கள் எல்லோரும்வெறுத்தொதுக்குகிறார்கள். மதுவை உருவாக்குபவன் துர்நாற்றத்தை ஏற்படுத்துகிறான் அவனும், அவன் பொருட்களும், வீடும், அவனால் தீண்டப்படுகின்ற எல்லாமும் துர்நாற்றத்தைத் தரும்.

மது உண்பவனை அவனுடைய மனைவியும், தாயும் தந்தையரும், சகோதரரும், குழந்தைகளும், கடவுளும் கூட வெறுக்கிறார்கள். ஆகையால் எவரும் மது அருந்தக் கூடாது. இவ்வாறு மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களாக ஸ்ரீ நாராயண குரு கூறுகிறார்.

## III) சுத்தி பஞ்சகம்

ஸ்ரீ நாராயண குரு தனது "சுத்தி பஞ்சகத்தில்" [80] ஐந்து வகையான சுத்திகளைப் பற்றி கூறுகிறார். அவை உடல், சுத்தம், வாக்கு சுத்தம், மனச்சுத்தம், புலன்கள் சுத்தம் மற்றும் வீட்டினுடைய சுத்தம் ஆகியவை முதன்மையானதாக குறிப்பிடுகிறார்.

### உடல் சுத்தம்

உடல் சுத்தம் என்பது தினமும் சுத்தமான நீரில் நீராடல் வேண்டும். அழுக்குத் தேங்கும் கண், காது, வாய், நகம் இவற்றை சுத்தப்படுத்த வேண்டும். சுத்தமான தூய ஆடை அணிய வேண்டும். நல்ல உணவை உண்ண வேண்டும். சுத்தமான நீரைப் பருக வேண்டும் . நல்ல காற்றை சுவாசிக்க வேண்டும். கை, கால்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இவற்றை தேக சுத்தி (உடல் சுத்தம்) என்கிறார்.

### வாக்கு சுத்தம்

நாம் பேசும் வார்த்தைகள், பொருள் நிறைந்ததாகவும், இனிமையானதாகவும், தெளிவானதாகவும், கவர்ச்சிகரமானதாகவும், இடமறிந்தும் இருக்க வேண்டும். இவையே வார்த்தைகளின் குணங்களாகும். இத்தகைய வார்த்தைகள் கேட்பவனுக்கு இஷ்டமானதாகவும் உண்மையை உணரவைக்க கூடியதுமாக இருக்கும். வேதத்தைப் பாராயணம் செய்வதும், இறைவனை புகழ்ந்து பாடுவதும் வாக்குகளை மெருகூட்டும் என்கிறார்.

**மனசுத்தம்**

கபடமின்மை, கருணை, தியானம், பணிவு, அன்பு செலுத்துதல், தைரியம் ஆகிய இவையே சுத்தமான மனதின் உறைவிடம் ஆகும் என்கிறார்.

**புலன்கள் சுத்தம்**

தேவையில்லாத காரியங்களைச் செய்யாதிருத்தல், உடல் உறுப்புகளை அதிகம் சினேகிக்கவோ வேதனைப்படுத்தவோ கூடாது. அருகதையற்றவர்களைப் புகழக் கூடாது. இவையே புலன்களை சுத்தமாக்கும் செயல்பாடுகள்.

**வீட்டு சுத்தம்**

வீட்டின் உட்பகுதி சூரிய ஒளியும், சுத்த காற்றும் கடந்து போகும் வகையில் இருக்க வேண்டும். வேண்டாத பொருட்களை வெளியிலே எறிந்து எல்லா இடங்களையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். வீட்டைச் சுற்றி மல, ஜலம் கழிக்கக் கூடாது. காலையும், மாலையும், நறுமணப் பொருட்களைப் புகைக்க வேண்டும். இவையே கிரக சுத்திக்கு வேண்டிய செயல்கள் என்கிறார் ஸ்ரீ நாராயண குரு.

மனிதனை நல்வழிப் படுத்த இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் அறநெறிக் கருத்துகளின் அவசியத்தை அறிய முடிகிறது.

## 5.8. மூடநம்பிக்கை கூடாது

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவை பொருத்தவரை மூடநம்பிக்கைகளை வேண்டாம் என்கிறனர்.

இராமலிங்க அடிகளார் கூற்றுப்படி,

“அணங்கெழுபேர் ஓசையொடும் பறையோசை
பொங்கக்கோ ரணிகொண் டந்தோ
பிணங்கழுவி எடுத்துப்போய்ச் சுடுகின்றீர்
இனிச்சாகும் பிணங்க ளேநீர்
கணங்கழுகுண் டாலும்ஒரு பயனுண்டே
என்னபயன் கண்டீர் சுட்டே
எணங்கெழுசாம் பலைக்கண்டீர் அதுபுன்செய்
எருவுக்கும் இயலா தன்றே” [81] என்கிறார்.

“குணம் புதைக்க உயிரடக்கம் கொண்டதுசுட்
டால்அதுதான் கொலையாம் என்றே
வணம் புதைக்க வேண்டும் என வாய்தடிக்கச்
சொல்கின்றேன் வார்த்தை கேட்டும்
பிணம்புதைக்கச் சம்மதியீர் பணம்புதைக்கச்
சம்மதிக்கும் பேய ரேநீர்
எணம்புதைக்கத் துயில்வார்நும் பாற்றுயிலற்
கஞ்சுவாரே இழுதை யீரே” [82] என்கிறார்.

இராமலிங்க அடிகளார் இறந்த உடலை எரிக்கக் கூடாது, புதைக்க வேண்டும் என்கிறார். மேலும் வருந்தக் கூடாது, அழக்கூடாது என்கிறார்.[83]

இராமலிங்க அடிகளார் கூற்றுப்படி புருடனிறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டாம். மனைவி இறந்தால் புருடன் வேறு கல்யாணப் பிரபத்தனஞ் செய்ய வேண்டாம். பிள்ளைகளிறந்தால் சஞ்சலிக்க வேண்டாம். கர்ம காரியங்கள் ஒன்றுஞ் செய்ய வேண்டாம். தெரிவிக்கத் தக்கவர்களுக்குத் தெரிவித்து ஒரு தினத்தில் நேரிட்டவர்களுக்கு நேரிட்ட மட்டில் அன்ன விரயஞ் செய்ய வேண்டும் என்கிறார்.[84]

ஸ்ரீ நாராயண குரு கூற்றுப்படி மரணத்தைக் குறித்து யாரிடத்திலும் முன்கூட்டி சொல்லக்கூடாது. அது முன்கூட்டி தெரிந்து விட்டால் மக்கள் எல்லோரும் இங்கு வந்து சேருவார்கள். பலவித துன்பங்கள் அவர்களுக்கு நேர வேண்டி வரும். ஆகையினால் மரணத்தைக் குறித்து, சொல்லாமல் இருப்பதே நல்லது. சிலர் நாக்கின் கட்டுப்பாடுகளால் மூச்சு நிறுத்தியும், சிலர் வேறுவிதமாக மூச்சை நிறுத்தியும் மரணம் பெறுவதுண்டு. அதெல்லாம் இயற்கைக்கு விரோதமானது. அது தற்கொலைக்கு சமமாகும் என்கிறார்.[85]

இராமலிங்க அடிகளார் கூற்றுப்படி “கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக”[86] என்று மூடநம்பிக்கை வேண்டாம் என்கிறார். “வேதம், ஆகமம் புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லட்சியம் வைக்க வேண்டாம்”[87] என்கிறார்.

“சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லட்சியம் வைக்க வேண்டாம்”[88]என்கிறார்.“கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக என்றும் என்னை ஏறாநிலை மிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு. தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கி விட்டது”[89] என்கிறார்.

ஸ்ரீ நாராயண குரு கடவுள் வழிபாட்டு முறையில் உள்ள மூடப்பழக்க வழக்கத்தைக் குறிப்பிடும்போது ஒவ்வொரு ஆண்டும் மஞ்சள் ஆடை அணிந்து, ஏராளமான கூட்டத்தை சிவகிரியில் கூட்டுவதால் என்ன சாதிக்கப் போகின்றார்கள். ஏராளமான பணத்தைச் செலவு செய்து, கடினமான நடைப்பயணத்தை மேற்கொள்ளுவதால் என்ன பயன்? எதுவுமே கிடைக்கப் போவதில்லை அப்படி இருக்கக்கூடாது. ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் நோக்கம் இருக்க வேண்டும் என்கிறார்.[90]

ஸ்ரீ நாராயண குரு கோட்டாறில் உள்ள கடுக்கை என்னும் இடத்தில் ஒரு சமாதி கோயிலில் ஆடு, கோழிகளை பலி கொடுத்தும், கள், சாராயம் இவைகளைக் கொண்டும் படைத்தும் வழிபட்டுவரும் மூடபழக்க வழக்கங்களை மாற்றி, சாத்வீக முறையில் வழிபடும் நிலையை உருவாக்கிக் கொடுத்தார். இதன் மூலம் மூடநம்பிக்கைகள் கூடாது என்ற இராமலிங்க அடிகள் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் கருத்தை அறிய முடிகிறது.[91]

## 5.9. பெண்ணுரிமை

ஆண் பெண் வேறுபாடு கூடாது என்கின்றார் இராமலிங்க அடிகள்,

"ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும் இருக்கும் விதம் எவ்வாறெனில், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், பிரகிருதி, ஆன்மாவென்றும் 7–ம் கூடி, சுக்கில சுரோணித சம்பந்த சப்த தாதுவாய், சிருஷ்டிக்குக் காரணமாயின. ஆதலால் ஆண்பாகம் சேராது பெண்ணுருவப் படாது, பெண்பாகம் சேராது ஆணுருவப்படாது. மேலும் ரூபபேதத்தை பெண்ணாண் என்பது அறியாமை"[92] என்கிறார்.

ஸ்ரீ நாராயண குரு கூற்றுப்படி, ஆணும் பெண்ணும் அன்பால் இணைந்து அந்த உறவில் சந்ததி உருவாகுமானால் அவருடைய சாதி ஒன்று என்று கூறலாம். அவ்வாறில்லாமல் அதனை இரண்டு என்று கூறுவது அறியாமையினால் ஏற்படும் மன வேறுபாடாகும் என்கிறார்.[93]

மேற்கண்ட ஸ்ரீ நாராயண குருவின் வரிகள் சாதி வேறுபாட்டை மட்டும் அறியாமை என்று கூறவில்லை ஆண், பெண் வேறுபாடுகளும் அறியாமை என்கிறார். "மனித சாதி" ஒன்று தான் உள்ளது அதில் வேறுபாடு கூடாது என்கிறார்.

சமுதாயத்தில் சரிபாதியாக உள்ள பெண்ணை அடிமையாக்க 'கற்பு' என்ற ஒன்றைப் பயன்படுத்தினர். இதை இராமலிங்க அடிகள் மறுத்து கற்பு என்பது இருவருக்கும் தேவை என்கிறார்."பிறர் நெஞ்சு புகாத கற்பு, பெண்ணுக்கேயன்றி ஆணுக்கும் தேவை" [94] என்கிறார்.

மேலும், இராமலிங்க அடிகளார் பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்களை அவசியம் கற்பிக்க வேண்டியது. மேலும் பேதமற்று அபேதமாய்ப் படிப்பு முதலியவற்றையும் சொல்லிக் கொடுக்க வேண்டியது. தத்துவம் முதலியவற்றின் சொரூப ரூபாதிகளைத் தெரிவிக்க வேண்டும் என்கிறார்.[95]

ஸ்ரீ நாராயண குரு கூற்றுப்படி 'கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்ளலாம் என்கிறார்.[96] மேலும் கல்வி, சுத்தம், கடமை, கூடி வாழ்தல், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், தொழில்நுட்ப பயிற்சி போன்றவற்றை ஆண், பெண் அனைவருக்குமாக போதிக்க வேண்டும் என்கிறார்.[97]

மேலும் திருமணத்தில் வரதட்சனை வாங்குவதும், கொடுப்பதும் மணமக்களை விற்பதற்கும், வாங்குவதற்கும் ஒப்பாகும் என்கிறார்.[98] "கலப்பு திருமணத்தின் மூலம் தான் சாதி ஒழியும் என்று 1916ஆம் ஆண்டு கலப்பு திருமணங்களை நடத்திவைத்தார்.[99]

இராமலிங்க அடிகளார் தம் திருவருட்பா பாடலில் ஆண் பெண் சமத்துவத்தைக் கூறுகிறார்,

"பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்ணும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி"[100]

எனும் இராமலிங்க அடிகளாரின் அருட்பெருஞ்ஜோதி அகவல் வரிகள் ஆண், பெண் சமத்துவத்தை உணர்த்துவதாக அமைகின்றது.

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவைப் பொருத்தவரை ஆண், பெண் வேறுபாட்டை ஏற்கவில்லை. எனவே ஆண், பெண் ஏற்றத் தாழ்வு கூடாது என்பதை அறிய முடிகிறது.

## 5.10. நிறுவிய நிறுவனங்கள்

இராமலிங்க அடிகளார் தம் சமரச சுத்த சன்மார்க்க கொள்கைகளை மக்களிடம் பரப்ப 1865 ஆம் ஆண்டில் "சமரச வேத சன்மார்க்க சங்கம்" என்ற சங்கத்தை ஏற்படுத்தினார். பிற்காலத்தில் இச்சங்கத்தின் பெயர் "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" என இராமலிங்க அடிகளாரால் மாற்றியமைக்கப்பட்டது.[101]

தமிழகத்தில் ஆன்மிகத்திற்கென முதன் முதலில் சங்கம் கண்டவர் வள்ளற் பெருமான் இராமலிங்க அடிகளேயாவார்.[102]

சமரச சுத்த சன்மார்க்கத்தின் கொள்கையாகிய கடவுள் ஒருவரே, அவர் அருட்பெருஞ் ஜோதியர், சிறுதெய்வ வழிபாடு கூடாது, அத்தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலிகூடாது, புலால் உண்ணக் கூடாது, ஜீவகாருணியமே பேரின்ப வீட்டின் திறவுகோல், சாதி, சமய வேறுபாடு கூடாது, எவ்வுயுரும் தம்முயிர் போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையை மேற்கொள்ள வேண்டும். மூடநம்பிக்கை கூடாது போன்ற கொள்கைகளை கடைப்பிடித்து

மரணமில்லா பெருநிலையை அடைவதற்கு "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" என்ற சங்கம் இராமலிங்க அடிகளாரால் வடலூரில் ஏற்படுத்தப்பட்டது.

ஸ்ரீ நாராயண குருவின் கொள்கைகளாகிய,

"ஒரு சாதி, ஒரு மதம், ஒரு கடவுள் – மனிதனுக்கு". "மதம் எதுவாயினும் மனிதன் முன்னேறினால் போதும்". "எல்லா மதங்களின் உயிர் சத்தும் ஒன்றே" ஆகும்.[103]

சங்கம் அமைத்து சக்தி பெறுங்கள், கல்வியால் விழிப்படையுங்கள் தொழில் செய்து முன்னேறுங்கள், நாம் அனைவரும் ஆத்ம சகோதரர்களே ஆவர்.[104] போன்ற ஸ்ரீ நாராயண குருவின் கொள்கைகளை மக்களிடம் பரப்பவும், சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வை போக்கவும் ஸ்ரீ நாராயண குருவால் 1903 ஆம் ஆண்டு "ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம்"[105] என்ற அமைப்பை ஏற்படுத்தினார்.

ஸ்ரீ நாராயண குரு சாதி, மத வேறுபாட்டை ஒழிக்க 1915 ஆம் ஆண்டு சமபந்தி போஜனம் நடத்தினார் . 1919 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7ம் நாள் "சமபந்தி போஜன நாள்" என்று ஸ்ரீ நாராயண குருவால் ஏற்படுத்தப்பட்டது.[106] இராமலிங்க அடிகளாரால் சாதி, மதம் பாராது ஆண், பெண் வேறுபாடு இல்லாது பசித்த ஏழைகளுக்கு ஜீவகாருணியமாகிய பசி நீக்கத்திற்காக 23-05-1867 ஆம் ஆண்டு 'சத்திய தரும சாலையை' ஏற்படுத்தி ஏழைகளின் பசி பிணியை நீக்கினார் என்பது குறிப்பிடதக்கது ஆகும்.[107]

மானுட சமுதாயம் மேன்மையடைந்து சிறந்து விளங்கிட இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்கள் பயன்படுகிறது.

## குறிப்புகள்

1. “திருவருட்பா”, பா. 4160.
2. மேலது., பா. 4161.
3. மேலது., பா. 4162.
4. ம.பொ.சிவஞானம்,“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 145.
5. ஸ்ரீ நாராயண குரு,“அனுகம்பா சதகம்”, ப. 355-357.
6. மேலது., பா. 1.
7. மேலது., பா. 2.
8. ம.பொ.சிவஞானம்,“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 191.
9. மேலது., ப. 198.
10. “அனுகம்பா சதகம்”, பா. 3.
11. ம.பொ.சிவஞானம்,“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 118.
12. “அனுகம்பா சதகம்”, பா. 4.
13. திருவள்ளுவர்,“திருக்குறள்”, பா. 80.
14. ஊரன் அடிகள்,“இராமலிங்க அடிகள் வரலாறு”, ப. 551.
15. மேலது., பா. 589.
16. மா.பொ.சிவஞானம்,“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 215.
17. “அனுகம்பா சதகம்”, பா. 5.
18. ம.பொ.சிவஞானம்,“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 138.
19. “அனுகம்பா சதகம்”, பா. 6.

20. மேலது., பா. 7.

21. மேலது., பா. 8.

22. மேலது., பா. 9.

23. மேலது., பா. 10.

24. மேலது., பா. 11.

25. ம.பொ.சிவஞானம்,“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 168.

26. “திருவருட்பா”, பா. 3503.

27. ஸ்ரீநாராயணகுரு,“ஜீவகாருணிய பஞ்சகம்”, ப. 314-315.

28. “திருவருட்பா”, பா. 3506.

29. மேலது., பா. 3407.

30. மேலது., பா. 5566.

31. மேலது., பா. 4615., அகவல், பா. 294.

32. மேலது., பா. 4615., அகவல், பா. 115-116.

33. மேலது., பா. 4615., அகவல், பா. 211-212

34. மேலது., பா. 4949.

35. ஸ்ரீ நாராயணகுரு,“ஸ்ரீநாராயண தர்மம்”, ப. 28.

36. ஸ்ரீ நாராயணகுரு,“நிர்விருதி பஞ்சகம்”, ப. 266.

37. “திருவருட்பா”, 4615 அகவல், பா. 222.

38. மேலது., பா. 3640.

39. மேலது., பா. 3639.

40. “ஆத்மோபதேச சதகம்”, பா. 47.

41. மேலது., பா. 44.

42. "திருவருட்பா., பா. 5570.

43. மேலது., பா. 5700.

44. மேலது., பா. 4726.

45. மேலது., பா. 5696.

46. ஸ்ரீ நாராயணகுரு,"தெய்வ சதகம்", ப. 36.

47. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 125.

48. மேலது., பா. 125.

49. "ஆத்மோபதேச சதகம்", பா. 100.

50. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 299.

51. அமுதன்,"அறம் எனப்படுவது....,", ப. 93.

52. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 133.

53. மேலது., ப. 132.

54. "Sree Narayana Guru, Social Philosopher of Kerala", p. 28.

55. மேலது., பா. 28.

56. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 183.

57. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகளார் வரலாறு", ப. 500.

58. மேலது., பா. 514.

59. "திருவருட்பா", பா. 4909.

60. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 165.

61. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகளார் வரலாறு", ப. 385.

62. மேலது., ப., 388.

63. மேலது., ப. 386.

64. அம்பேத்கர்பிரியன்,“ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு”, ப. 177.

65. மேலது., ப. 237.

66. ஊரன் அடிகள்,“இராமலிங்க அடிகளார் வரலாறு”, ப. 483.

67. அம்பேத்கர்பிரியன்,“ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு”, ப. 208.

68. ஊரன் அடிகள்,“இராமலிங்க அடிகள் வரலாறு”, ப.507.

69. ம.பொ.சிவஞானம்,“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 121.

70. அம்பேத்கர்பிரியன்,“ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு”, ப. 157.

71. மேலது., பா. 133.

72. மேலது., பா. 126.

73. மேலது., பா. 127.

74. மேலது., பா. 210.

75. மேலது., பா. 238.

76. ம.பொ.சிவஞானம்,“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 226 – 228.

77. மேலது., பா. 227–228.

78. மேலது., பா. 233.

79. ஸ்ரீ நாராயண குரு, “ஸ்ரீநாராயண தர்மம்”, ப. 36–38.

80. மேலது., ப. 38–40.

81. “திருவருட்பா”, பா. 5609.

82. மேலது., பா. 5610.

83. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகளார் வரலாறு", ப. 83.

84. மேலது., பா. 504.

85. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 172.

86. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 278.

87. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 548.

88. மேலது., பா. 550.

89. மேலது., பா. 551.

90. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுருவின் வாழ்க்கை வரலாறு", ப. 130.

91. மேலது., பா. 209.

92. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 140.

93. ஸ்ரீ நாராயணகுரு,"ஸ்ரீநாராயண தர்மம்", ப. 28.

94. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 131.

95. மேலது., ப. 141.

96. "Sree Narayana Guru, Social Philosopher of Kerala", p. 77.

97. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 130.

98. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", பா. 234.

99. மேலது., பா. 238.

100. "திருவருட்பா", அகவல், பா. 704.

101. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகளார் வரலாறு", ப. 280.

102. மேலது., பா. 280.

103. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 232.

104. மேலது., பா. 232.

105. "Sree Narayana Guru, Social Philosopher of Kerala", p. 34.

106. அம்பேத்கர்பிரியன்,"ஸ்ரீநாராயணகுரு வாழ்க்கை வரலாறு", ப. 99.

107. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகள் வரலாறு", ப. 333.